## 2

# பழைய ஏற்பாட்டில் இசை

*பாடல்களில் தேவனை ஆராதித்தலுக்கான குறிப்புக் கருத்துக்கள் பழைய ஏற்பாடு முழுவதிலும் காணப்படுகின்றன, இவை சங்கீதங்களின் புத்தகத்தில் மிகவும் அடிக்கடி காணப்படுகின்றன. மற்ற பல வகையான சந்தர்ப்பப் பொருள்களிலும் இசை காணப்படுகிறது. நியாயப்பிரமாணத்தின்கீழ் மற்றும் அதற்கு முன்னரும்கூட தேவனை ஆராதித்தவர்களால் இசை பயன்படுத்தப் பட்டதை நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களிடத்தில் இருந்து தேவன் எதை விரும்புகிறார் என்பது பற்றிய உட்கண்ணோக்கம் சிலவற்றை நாம் ஆதாயப்படுத்தலாம்.*

### பென்ட்டடக் (முதல் ஐந்து புத்தகங்கள்)

*முதல் ஐந்து புத்தகங்களில் பாடுதல் அல்லது இசை பற்றிய குறிப்புகள் வெகு சிலவே உள்ளன. காயீனின் வழியில் வந்த யூபால் என்பவர், கின்னரக்காரர் நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பனானார் (ஆதியாகமம் 4:21). யாக்கோபு சந்தோஷமாய், சங்கீதம் மேளதாளம் கின்னரமுழக்கத்துடனே அனுப்பப் படுவதற்குப் பதிலாக திருட்டளவாய்ப் போனதைக் குறித்து அவரை லாபான் கடிந்து கொண்டார் (ஆதியாகமம் 31:27).*

*செங்கடலை வெற்றிகரமாகக் கடந்த பின்பு, மோசேயும் இஸ்ரவேல் மக்களும் கர்த்தருக்குப் பாடல் ஒன்றைப் பாடினர் (யாத்திராகமம் 15:1-18). அதை இவ்வசனப் பகுதியானது, "கர்த்தரைப் புகழ்ந்துபாடின பாட்டு" என்று விவரிக்கிறது (யாத்திராகமம் 15:1). பின்பு மிரியாம் ஒரு தம்புருவை எடுத்துக்கொண்டு, தம்புருக்களை வைத்திருந்த மற்ற பெண்களை பாடுதல் மற்றும் ஆடுதலில் வழிநடத்தினாள் (யாத்திராகமம் 15:20, 21). பாலைவனத்தில் இஸ்ரவேல் மக்கள், "கிணற்றின் பாட்டு" என்று அழைக்கப்பட்ட பாடலை பாடினார்கள் (எண்ணாகமம் 21:17, 18). உபாகமம் 31:19-22ல், பாடகர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட இன்னொரு பாடல் குறிப்பிடப் பட்டுள்ளது. உபாகமத்தின் முடிவுப் பகுதிக்கு அண்மையில், மோசேயினால் பேசப்பட்ட பாடல் என்ற வகையில் ஒரு கட்டமைப்பு விவரிக்கப்பட்டள்ளது (32:1-43). இசைக்கருவிகள் துணையாகக் கொள்ளப்பட்டதென்று இவ்விடத்தில் குறிப்பிடப்படவில்லை.*

*ஆசாரிப்புக் கூடாரத்தில் ஆராதனை செய்வதற்கான அறிவுறுத்துதல் களை ஆண்டவர் கொடுத்த போது, வெள்ளியினால் இரண்டு பூரிகைகளைச் செய்யும்படி அவர் மோசேக்கு அறிவுறுத்தினார் (எண்ணாகமம் 10:1, 2). இந்தப் பூரிகைகள் சமிக்கை செய்யப் பயன்படுத்தப்பட வேண்டியவைகளாக இருந்தன. இவ்விரண்டும் ஊதப்படும்போது, சபையார் எல்லாரும் அவர்கள் கூடிவரும் கூடார வாசலில் வந்து கூட வேண்டியிருந்தது. ஆசாரியர்களான ஆரோனின் மகன்கள் அந்தப் பூரிகைகளை ஊத வேண்டியிருந்தது (எண்ணாகமம் 10:8), மற்றும் அவற்றை அவர்கள் ஊத வேண்டிய வேளையும்*

குறிப்பிடப் பட்டிருந்தது (லேவியராகமம் 23:24; எண்ணாகமம் 10:10). யூபிலி ஆண்டு கிடாரியின் கொம்பினால் (*shophar*) ஊதப்படும் சத்தத்துடன் பிறந்தது (லேவியராகமம் 25:9, 10). ஆசாரிப்புக் கூடார ஆராதனை தொடர்பாக வேறு எந்த இசைக்கருவியும் குறிப்பிடப்படவில்லை. பயன்படுத்தப்பட்ட இசையைத் தேவன் முறைப்படுத்தினார்.

இசையானது இஸ்ரவேலில் இருந்ததைக் காட்டிலும், மெசப்பொத்தாமியா மற்றும் நைல் பள்ளத்தாக்குகள் ஆகிய இரண்டிலும் மிகவும் பழமையானதாக இருந்தது. குறிப்பிட்ட சில விஷயங்களில் மக்கள் தங்கள் முன்னோர்களைப் போல் ஆகிவிடக்கூடாது என்று கட்டளை இடப்பட்டு இருந்தாலும் (லேவியராகமம் 18:3; உபாகமம் 12:30), கொண்டாட்டப் பாடல் மற்றும் ஆடல் என்பவை இஸ்ரவேல் மக்களின் கலாச்சாரத்தின் பாகமாக இருந்தன.

## வரலாற்றுப் புத்தகங்கள்

வரலாற்றுப் புத்தகங்களில் பாடுதலுக்கான மறைவான குறிப்புகள் ஏராளமாக உள்ளன. சிசெராவை வெற்றிகொண்ட பிற்பாடு, தெபோராளும் பாரூக்கும் நியாயாதிபதிகள் 5ல் வெற்றிப் பாடலை இயற்றிப்பாடினர். யெப்தா யுத்தத்தில் இருந்து திரும்பி வந்தபோது அவரது மகள் தம்புரோடும் நடனத்தோடும் அவருக்கு எதிர்ப்பட்டாள் (நியாயதிபதிகள் 11:34). சவுல் அரசர் சாமுவேலினால் அபிஷேகம் பண்ணப்பட்ட பின்பு, மேடையிலிருந்து இறங்கிவந்த தீர்க்கதரிசிகளின் கூட்டத்திற்கு எதிர்பட்டார்; அவர்களுக்கு முன்பாகத் தம்புரும் மேளமும் நாகசுரமும் சுரமண்டலமும் போனது (1 சாமுவேல் 10:5, 10). தாவீது, கோலியாத்தை வெற்றிகொண்ட பின்பு, பெண்கள் ஆடல்பாடலுடன் புறப்பட்டு, மேளங்களோடும் கீதவாத்தியங்களோடும் சந்தோஷமாய் ராஜாவாகிய சவுலுக்கு எதிர்கொண்டு வந்தார்கள். அந்த ஸ்திரீகள் ஆடிப்பாடுகையில்: சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறைமுறையாகப் பாடினார்கள் (1 சாமுவேல் 18:6, 7).

தாவீது தாமே ஒரு இசைக்கலைஞராக அறியப்பட்டிருந்தார். சவுல் அரசரின் மனமானது அசுத்த ஆவியினால் அலைக்கழிக்கப்பட்ட வேளையில் அவரைச் சவுக்கியப்படுத்த, சுரமண்டலம் (*nagan*) வாசிக்கும்படி தாவீது தேர்ந்து கொள்ளப் பட்டிருந்தார் (1 சாமுவேல் 16:14-23; 18:10; 19:9). சவுல் மற்றும் யோனத்தான் ஆகியோருக்காகத் தாவீது ஒரு புலம்பல் பாடலை எழுதி அந்த வில்லின் பாடலைப் போதிக்கும்படி இஸ்ரவேல் மக்களுக்குக் கட்டளையிட்டார் (2 சாமுவேல் 1:17, 18). அவர் தமது விரோதிகளிடம் இருந்து தன்னை விடுவித்ததற்காகக் கர்த்தரைத் துதித்து ஒரு பாடலையும் எழுதியிருந்தார் (2 சாமுவேல் 22:1-51).

பிற்பாடு தாவீதும் இஸ்ரவேல் வீட்டார் அனைவரும், உடன்படிக்கைப் பெட்டியை அபினதாப் என்பவரின் வீட்டிலிருந்து எடுத்துக்கொண்டு வந்தனர். அவர்கள் சகலவித கீதவாத்தியங்களோடும், சுரமண்டலம் தம்புரு மேளம் வீணை கைத்தாளம் ஆகிய இவைகளோடும், கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடிக்கொண்டு போனார்கள் (2 சாமுவேல் 6:5; 1 நாளாகமம் 13:7, 8). உடன்படிக்கைப் பெட்டியைத் தாவீது, ஓபேத்ஏதோம் என்பவரின் வீட்டில் இருந்து கெம்பீர சத்தத்தோடும் எக்காள தொனியோடும் எடுத்துக் கொண்டு வந்தபோது, அவர் கர்த்தருக்கு முன்பாகக் குதித்து, நடனம்பண்ணினார் (2 சாமுவேல் 6:14, 15).

சாலொமோன் தேவாலயத்தைக் கட்டுவதற்கு முன், ஆசரிப்புக்கூடாரத்தில் சங்கீத சேவையை நடத்துகிறதற்கு மனிதர்களை நியமித்திருந்தார் (1 நாளாகமம் 6:31, 32). சாலொமோனின் பாடல்கள் 1,005 என்று எண்ணப்பட்டுள்ளன. பாபிலோனிய அடிமைத் தளையில் இருந்து திரும்பிவந்த பின்பு, இஸ்ரவேல் மக்கள் திரும்பக் கட்டியெழுப்பிய தேவாலயத்தையும் அதின் மதில்களையும் அர்ப்பணித்தபோது, லேவியர்களால் துதி மற்றும் நன்றி செலுத்தும் பாடல்கள் பாடப்பட்டன (எஸ்றா 3:10; நெகேமியா 12:45, 46).

1, 2 நாளாகமம் புத்தகங்களை எழுதியவர், 1, 2 இராஜாக்களின் புத்தகங்களை எழுதியவரைக் காட்டிலும் அதிகமான ஆர்வத்தை, தாவீதின் இசைரீதியான ஏற்பாடுகளில் காண்பித்தார். வெள்ளிப் பூரிகைகளைக் கொண்டு சமிக்ஞை செய்தலுக்கு அப்பால், ஆசரிப்புக் கூடாரத்தின் ஆராதனைக்காக மோசேயினால் தரப்பட்ட அறிவுறுத்துதல்கள், இசைரீதியான ஆராதனை பற்றிய கூற்று எதையும் கொண்டிராது இருக்கையில், நாளாகமத்தை எழுதியவர், சுரமண்டலங்கள், கொம்புகள் மற்றும் கைத்தாளங்களால் தீர்க்கதரிசனம் சொல்லுகிறதற்கு, தாவீது மற்றும் ஊழியத்தின் கிரியைக்குக் குறித்து வைக்கப்பட்ட ஆசாப் மற்றும் ஏமான் என்பவர்களின் குமாரர்கள் ஆகியோருக்கு, உரிய மதிப்பைக் கொடுத்தார் (1 நாளாகமம் 25:1-8). எதுத்தூனின் குமாரர்களும் கர்த்தருக்கு நன்றி செலுத்தி அவரைத் துதிப்பதில், சுரமண்டலங்களுடன் தீர்க்கதரிசனம் கூறினார்கள் (1 நாளாகமம் 25:3). ஆண்கள் பெண்கள் ஆகிய இருசாராரும், தேவனுடைய வீட்டின் ஊழியத்தில், கைத்தாளங்கள், கொம்புகள் மற்றும் சுரமண்டலங்கள் ஆகியவற்றைக் கொண்டு இசைப்பதில் ஈடுபட்டிருந்தனர் (1 நாளாகமம் 25:6). அவர்கள் திறமை நிறைந்த மற்றும் பயிற்சிபெற்ற இசையமைப்பாளர்களாக இருந்தனர். இந்தத் தேவாலய இசைக் கலைஞர்கள் ஒரு சீட்டுக் குலுக்கல் மூலமாகத் தங்கள் கடமைகளுக்கென்று இருபத்து நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தனர். ஒரு குழுவாக அவர்கள் பாடல் நிகழ்த்துதலுடன், இந்தப் பாடகர்கள் பாடகர் குழுவின் வகையொன்றை வடிவமைத்து இருந்தனர். இவை யாவையும் தேவாலயம் கட்டப்படுவதற்கு முன்னரே நடந்ததாக உரைக்கப் பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்குத் தாவீது தெய்வீக அதிகாரத்துவம் எதையும் கொண்டிருந்ததாக இந்த நிலையில் கூறப்பட வில்லை. பிற்பாடு நாம் 2 நாளாகமம் 29:25ல், “கற்பனை கர்த்தரால் அவருடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு உண்டாயிருந்தது” என்று வாசிக்கிறோம்.

ஆதம் கிளர்க் என்பவர், பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தே, நீண்ட காலமாகப் பயன்படுத்தப் பட்டுள்ள அவரது விளக்கவுரையில், 2 நாளாகமத்தில் 29:25ம் வசனத்தின் சீரியாக் மற்றும் அரபி மொழிக் கூற்றுகள் எபிரெய வசனத்தில் இருந்து வேறுபட்டிருத்தல் குறித்து உறுதிப்படுத்தினார். அவர் பின்வருமாறு எழுதினார்,

> கர்த்தருடைய கரம் அல்லது கட்டளை மற்றும் அவரது தீர்க்கதரிசிகளின் கட்டளை ஆகியவற்றினால், லேவியர்கள் கர்த்தரைத் துதிக்க வேண்டும் ... தாவீதின் கட்டளையினாலேயே இவ்வளவு அதிகமான இசைக்கருவிகள் தெய்வீக ஆராதனையில் அறிமுகப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

பின்பு கிளர்க் ஒரு கேள்வி கேட்டார். இசைக் கருவிகளைப் பயன்படுத்துதல்

என்பது நியாயப்பிரமாணத்தினால் குறிப்பிடப்பட்டு இருந்தாலும், "இது அவைகள் கிறிஸ்தவ ஆராதனையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு ஆதாரமாக, [உதாரணமாகப் பயன்பட] முடியுமா?" என்று அவர் கேட்டார்.[1]

கிளர்க்கின் விஷயம், டேவிட் லிப்ஸ்கோம்ப் மற்றும் கை N. வுட்ஸ்[2] ஆகியோரால், பதிப்புகளுக்கு எவ்வித மறைவான குறிப்புரைகளும் இன்றி மறுபடியும் எடுத்துரைக்கப் பட்டது; ஆனால் 1 அல்லது 2 நாளாகமப் புத்தகங்களின் சந்தர்ப்பப் பொருளில், கள்ளத் தீர்க்கதரிசிகள் இருந்தனர் என்பதாகத் தீர்க்கதரிசிகள் குறிப்பிட்டதாகக் கருத்து எதுவும் கூறுவதில்லை. புதிய ஏற்பாட்டில் தாவீது, தமது சங்கீதங்களை எழுதியதில் ஆவியானவரால் பேசிய தீர்க்கதரிசி என்று உய்த்துணரப் பட்டிருக்கிறார் (நடபடிகள் 2:30). பவுல் தாவீதைக் குறிப்பிட்டார் (ரோமர் 4:6). எபிரெய, கிரேக்க மற்றும் இலத்தீன் மொழிப் பதிப்புகள் யாவும் தாவீதிற்குத் *தெய்வீக அதிகாரத்துவத்தை* உரிமை கோருகின்றன.

சாலொமோன் தேவாலயத்தைக் கட்டி முடித்திருந்தபோது, பேழை தேவாலயத்திற்குள் கொண்டுவரப்படுகையில், தேவாலயப் பாடகர்கள் பீடத்தின் கிழக்கில் நின்றிருந்தனர். மேலும் பூரிகைகளுடன் 120 ஆசாரியர்களும் இருந்தனர். பாடகர்கள் கைத்தாளங்களையும் தம்புருகளையும் சுரமண்டலங்களையும் வைத்துக் கொண்டிருந்தனர். இந்தக் குழுவான ஒன்றிப்புடன் கர்த்தரைத் துதித்து நன்றி செலுத்தியதைப் பிறர் கேட்கும்படி செய்தது. பூரிகைகள், கைத்தாளங்கள் மற்றும் பிற இசைக்கருவிகளுடன் கர்த்தரைத் துதிக்கும் பாடல் எழும்பியபோது, "கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது" என்று கூறப்பட்டது (2 நாளாகமம் 5:12, 13). "கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று" என்பதால் (2 நாளாகமம் 5:13, 14), அந்த வேளையில் கர்த்தர் அங்கு நடந்த நிகழ்வுகளில் பிரியமற்று இருந்தார் என்று எவரும் யூகிக்கமாட்டார்.

இந்த எழுத்தாளர், எசேக்கிய அரசரின் சீர்திருத்தங்கள் பற்றிய விபரத்திற்கு வரும் வரையிலும், இசைக்கு கூடுதலான இடத்தை ஒப்புக்கொடுக்கவில்லை. எசேக்கியா, கைத்தாளங்களையும் தம்புருகளையும் சுரமண்டலங்களையும் வாசிக்கிற லேவியரை (ஆலயத்தில்) நிறுத்தினார் (2 நாளாகமத்தில் 29:25). இந்த நடவடிக்கையானது தேவாலய முற்றத்தில் நடத்திருக்க வேண்டும்; அந்தக் கட்டிடத்தினுள் ஆசாரியர்கள் மாத்திரமே பிரவேசித்தனர். லேவியர்கள் தாவீதின் இசைக்கருவிகளுடன் நின்றனர், மற்றும் ஆசாரியர்கள் பூரிகைகளுடன் நின்றனர். பலிசெலுத்தப்பட்டபோது கர்த்தருக்குப் பாடல்கள் பாடுதல் தொடங்கிற்று (2 நாளாகமம் 29:27). மக்கள் கூட்டம் முழுவதும் ஆராதித்தது, தேர்ந்தெடுக்கப்பட்ட லேவியர்கள் சந்தோஷத்துடன் துதிகளைப் பாடினர் மற்றும் மக்கள் தாழவிழுந்து பணிந்து ஆராதித்தனர்.

1 மற்றும் 2 நாளாகமங்களின் எழுத்தாளர் யோசியாவின் சீர்திருத் தங்களைப் பற்றிய தமது விவரிப்பில் இசைக்கென்று எந்தப் பகுதியையும் ஒப்புக்கொடுக்கவில்லை. இருப்பினும், யோசியா மரித்தபோது, அவர்மீது எரேமியா புலம்பல் ஒன்றைக் கூறினார். சகல பாடகரும் பாடகிகளும் "இந்நாள் வரைக்கும்" தங்கள் புலம்பல்களில் யோசியாவின்மேல் பாடுகிறார்கள் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது (2 நாளாகமம் 35:25).

## தீர்க்கதரிசனப் புத்தகங்கள்

ஏசாயா தீர்க்கதரிசனப் புத்தகம், பாடுதலுக்கு மொத்தம் இருபத்து மூன்று மறைவான குறிப்புகளைக் கொண்டுள்ளது: அவற்றில் பதினைந்து மனிதப் பாடுதலுக்கானதாக[3] உள்ளது மற்றும் ஏழு பூமி, மலைகள், வானங்கள் மற்றும் இவை போன்றவை பாடுதலின் உருவகத்திற்கானதாக உள்ளது.[4] மனித நிகழ்வுகளில் பெரும்பான்மையானவை, உதவியாக இசைக்கருவிகள் இருந்ததாகக் குறிப்பிடப்படாமலேயே, சந்தோஷத்திற்காகப் பாடுதலை உள்ளடக்குகின்றன. இரண்டு நிகழ்வுகள் மாத்திரம் இசைக் கருவிகளின் துணையை வெளிப்படையாகக் குறிப்பிடுகின்றன. அவற்றில் ஒன்றில், ஏசாயா "வேசியின் பாடலை" குறிப்பிட்டார், இது ஒரு வேசி தனது வீணையை எடுத்துக்கொண்டு பாடுதலைச் சித்தரிக்கிறது; அவர் [ஏசாயா], தேவனுக்கு தீரு உண்மையற்று இருந்தநிலையை விளக்கிக் கொண்டிருந்தார் (ஏசாயா 23:15, 16). இரண்டாவது விஷயம் கர்த்தருடைய பர்வதமாகிய இஸ்ரவேலின் கன்மலையண்டைக்குப்போக நாகசுரத்தோடே நடந்து வருகிறபோது மகிழுகிற ஒரு நபரைப் பற்றிக் கூறுகிறது (ஏசாயா 30:29). இவற்றில் ஒரு விஷயம் மாத்திரமே கர்த்தருடைய வீட்டில் இருத்தல் பற்றி வெளிப்படையானதாக உள்ளது: எசேக்கியா இராஜா, "கர்த்தர் என்னை இரட்சிக்கவந்தார்; ஆகையால் எங்கள் ஜீவநாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே என் கீதவாத்தியங்களை வாசித்துப் பாடுவோம்" என்று கூறினார் (ஏசாயா 38:20). "கர்த்தருடைய ஆலயம்" [ஆங்கிலத்தில் இது, "The house of the LORD" என்றுள்ளது] என்பது தேவாலயமாக இருக்கலாம், அல்லது இது பலஸ்தீனத்தைக் குறிக்கலாம்.

ஏராளமான இவற்றுக்கு நேர் எதிரிடையாக, பாடுதலைப் பற்றி எரேமியா மூன்றே மூன்று மறைவான கருத்துக்களை ஏற்படுத்தினார் (எரேமியா 31:7, 12; 51:48). அவற்றில் ஒன்று, "வானமும் பூமியும் அவைகளிலுள்ள" யாவற்றினாலும் எழுப்பப்பட்ட "மகிழ்ச்சிக்கான கெம்பீர சத்தம்" ஆகும் (எரேமியா 51:48).

எசேக்கியேலின் தீர்க்கதரிசனம், தீருவில் பாட்டுகளின் சத்தமும் சுரமண்டலங்களின் சத்தமும் ஒய்ந்து போகும் என்று அச்சுறுத்திற்று (எசேக்கியேல் 26:13). அதன்மீது ஒரு புலம்பல் எழுப்பப்பட்டது (எசேக்கியேல் 27:2). எசேக்கியேல் தீர்க்கதரிசனமானது, "இனிய குரலும் கீதவாத்தியம் வாசிப்பதில் சாமர்த்தியமுமுடையவன் பாடும் இன்பமான பாட்டு" என்பதாக, அவரது சமகாலத்தவர்களால் கண்ணோக்கப்பட்டது (எசேக்கியேல் 33:32). எசேக்கியேலின் தரிசனத்தில் தேவாலயம் பாடகர்களைக் கொண்டிருந்தது (எசேக்கியேல் 40:44). ஆமோஸ், இஸ்ரவேல் மக்கள் கீதவாத்தியங்களைத் (*nebel*; ஆமோஸ் 6:5) தங்களுக்கு உண்டுபண்ணி பாடல்கள் பாடியது பற்றிப் பேசினார். பழைய ஏற்பாட்டின் இசைக்கருவிகள் "இசையின் கருவிகள்" (*keli-shir*) என்றும் அழைக்கப் பட்டுள்ளன.

ஓசியா இசைத்தல் பற்றி ஒரே ஒரு முறை மாத்திரம் குறிப்பிட்டார்: இஸ்ரவேல், தன் இளவயதின் நாட்களிலும் தான் எகிப்துதேசத்திலிருந்து வந்த நாளிலும் பாடினதுபோல் பாடும் ["பதில் அளிக்கும்"; RSV] (ஓசியா 2:15 [17]). ஆமோஸ், தம்புருவின் சத்தத்திற்குப் பாடல்களை அளித்தவர்கள் உட்பட, "சீயோனிலே நிர்விசாரமாய்" இருந்தவர்கள் மீது சாபங்களைக் கூறினார் (ஆமோஸ் 6:1-5). கர்த்தருடைய நாளில் தேவாலயத்தின் (அல்லது

அரண்மனையின்) பாடல்கள் அலறுதலாக மாறும் என்று அவர் அறிவித்தார் (ஆமோஸ் 8:3). அந்தப் பாடல்கள் புலம்பலாக மாறும் (ஆமோஸ் 8:10) என்றும் பாடல்களின் சத்தத்தை எடுத்துப் போட்டதற்காகக் கர்த்தரைநோக்கிக் கூப்பிடுவார்கள் என்றும் அவர் எச்சரித்தார் (ஆமோஸ் 5:23).

ஆபகூக் "ஆழி இரைந்தது" என்று சித்தரித்தார் (ஆபகூக் 3:10). செப்பனியா காட்டுமிருகங்கள் பாடும் (அல்லது அலறும் மற்றும் கூவும்; RSV என்று விவரித்தார் (செப்பனியா 2:14). அவர் சீயோனின் குமாரத்தியை, கெம்பீரித்துப் பாடி ஆர்ப்பரிக்கும்படியும் கர்த்தர் இஸ்ரவேலின் மீது களிகூருவதை பண்டிகை நாளில் செய்வது போல் உரத்த பாடலில் அறிவிக்கும்படி அழைத்தார் (செப்பனியா 3:14, 17).

## சங்கீதங்களில் இசை

பாடுதலுக்கான மறைவான குறிப்புகள் (பழைய ஏற்பாட்டின் கவிதைப் புத்தகங்கள் என்ற) எழுத்துக்களிலும் சிதறலாகத் தோன்றுகின்றன. யோபு, விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப் பண்ணியதாக உரிமை கோரினார் (யோபு 29:13). நீதிமொழிகள் மன துக்கமுள்ளவனுக்குப் பாட்டுகளைப் பாடுதலில் உள்ள தவறு பற்றிப் பேசுகிறது (நீதிமொழிகள் 25:20). நீதிமானோ பாடி மகிழ்கிறான் (நீதிமொழிகள் 29:6). பிரசங்கி புத்தகத்தை எழுதியவரின் வாழ்வில் சங்கீதக்காரரையும் சங்கீதக்காரிகளையும் அவர் சம்பாதித்தார் என்ற விஷயம் உள்ளடக்கப் பட்டுள்ளது (பிரசங்கி 2:8).

சங்கீதங்களின் தலைப்புகள், சங்கீதங்கள் எவ்வாறு பயன்படுத்தப் பட்டிருந்தன என்று கூறுகின்றன, ஆனால் அவைகள் சங்கீதங்களை எழுதி யவர்கள் கொண்டிருந்த சிந்தனைகள் அல்ல. அவைகள் எபிரெயம், கிரேக்கம் மற்றும் இலத்தீன் வேதாகமங்களில் மாறுபடுகின்றன. இசைச் கருவிகளை இசைக்கையில் கிடைக்கும் இசை இடைவேளையைக் குறிக்கிற *சேலா* என்ற சொற்றொடர், அறியப்படாத அர்த்தம் கொண்ட சொற்றொடரை விளக்குகிறது என்ற கோட்பாடாக மாத்திரம் உள்ளது.

சங்கீதங்கள் யாவும் குழுவாக ஆராதித்தல் என்பதையே பேசுகிறது என்று பரவலாக யூகிக்கப் பட்டிருந்தாலும், சங்கீதங்களில் பலவற்றில் தனிப்பட்ட ஆராதனையா அல்லது பொதுவான ஆராதனையா, எதைப்பற்றிப் பேசுகிறது என்பதை அவை சுட்டிக்காண்பிப்பது இல்லை. புத்திமதி கூறுவதற்கு முன்னிலைச் சொற்களைப் பயன்படுத்தி இருத்தலும்கூட குழு ஆராதனையைச் சுட்டிக் காண்பிக்க வேண்டும் என்று அவசியமில்லை. அது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுக்குப் புத்திமதி கூறப்பட்டது என்று சுட்டிக்காண்பிக்கும். தேவாலய ஆராதனையில், ஆசாரியர்களும் லேவியர்களும் இசைச் கருவிகளை இசைப்பவர்களாகவும் பாடகர்களாகவும் இருந்தனர். கூடிவந்திருந்த கூட்டத்தார் பாடகர்களாக இருக்கவில்லை.

150 சங்கீதங்களில், அறுபத்தி ஒன்பது சங்கீதங்கள், பாடுதலையும் சந்தோஷ ஆரவாரத்தையும் குறிப்பிட்டபோது, ஒரு இசைக்கருவியையும் குறிப்பிடவில்லை.[5] *Psallein* மற்றும் *humnein* என்ற வினைச்சொற்கள் இவற்றில் பயன்படுத்தப் பட்டுள்ளன.

ஒன்பது நிகழ்வுகளில் வாயானது துதியின் கருவி என்ற வகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.[6] உதடுகளும் நாவும் குறிப்பிடப் பட்டுள்ளன (சங்கீதம்

*71:23, 24; 119:13, 171, 172). "ஜாதிகள்" [மக்களினங்கள்] பாடும்படிக்கு "பூமியின் இராஜாக்களை" போலவே அழைக்கப் பட்டுள்ளனர் (68:32). உலகம் முழுவதும் பாடுவதாக உருவக நடையில் கூறப்பட்டுள்ளது (66:4).*

*பதினாறு சங்கீதங்கள் ஒரு இசைக்கருவியைப் பயன்படுத்துவதை வெளிப்படையாகக் குறிப்பிடுகின்றன.[7] இவற்றில் எதுவும் நியாயப்பிரமாணத்தின் கீழான ஆராதனையில், லேவியர்களின் பாடுதலில் இசைக்கருவித் துணையாக இருத்தல் என்பது பற்றிக் கேள்வி எழுப்பியதாகக் காணப்படுவதில்லை. யூதர்கள், இசைக்கருவிகள் இசைப்பவர்களைக் கொண்ட ஊர்வலங்களை நடத்தினர் (68:24, 25). ஆசாரியர்கள் பூரிகைகளை ஊதினர் மற்றும் லேவியர்கள் பாடினர். எக்காளங்கள் (150:3), சுரமண்டலங்கள் (33:2), மற்றும் கின்னரங்கள் (137:2) ஆகியவை பொதுவாகக் குறிப்பிடப்பட்ட இசைக்கருவிகளாக உள்ளன. சங்கீதம் 150 ஒரு முழு இசைச்குழுவையே பட்டியலிடுகிறது.*

*கும்ரான்,[8] மற்றும் ஒருவேளை அதைப்போன்ற பிற சமூகங்கள் சங்கீதங்களைப் பாதுகாத்து வைத்து வாசித்தன மற்றும் தங்கள் சொந்த சங்கீதங்களையும் இயற்றின. கும்ரானின் எழுத்து உருவாக்கங்களில் ஒன்று, நன்றி செலுத்தும் சங்கீதங்கள் என்று அழைக்கப்பட்டுள்ளது.*

*(Shir, "பாடுதல்") என்ற எபிரெய வார்த்தை எண்பத்து எட்டு சங்கீதங்களில் ஐம்பத்து ஏழு முறைகள் காணக்கிடக்கிறது, ஆனால் இவற்றில் நான்கு மட்டுமே ஒரு இசைக்கருவியையும் குறிப்பிடுகின்றன (33:3; 71:22; 144:9; 147:7).[9] மூன்று அல்லது நான்கு குறிப்புகள் (zamar, "பாடுதல்" ; 27:6; 57:7; 108:1; மற்றும் சாத்தியக்கூறான வகையில் 87:7) என்ற வினைச்சொல்லுடன் இணைவாக உள்ளன.*

*சில சங்கீதங்கள் தனிப்பட்ட அறிவித்தல்களாக உள்ளன. சங்கீதக்காரர் தேவனை ஒரு தனியான தமக்கே சொந்தமான இட அமைவில் துதித்தார். அது கடந்த நூறு ஆண்டுகளாக இருந்துள்ள கலந்துரையாடலாக இருப்பதில்லை. மிகப்பழைமையான கேள்வியானது, தனிப்பட்ட தியானங்களில் செய்யப்பட்டது என்ன என்பதற்கு மாறாக, சபை கூடுகையில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது என்ன என்பதாகவே உள்ளது.*

*சங்கீதங்களை மேற்கோள் காண்பித்தலின் மூலம், தாங்கள் செய்வதை நியாயப்படுத்த முயற்சிப்பவர்கள் (அவர்கள் சுயாதீனத்திற்கோ அல்லது நியாயப்படுத்துதலுக்கோ எதற்கு வேண்டுகோள் விடுத்தாலும்) இந்தக் கேள்வியின் மறுபக்கத்தைக் கண்ணோக்க வேண்டும். கர்த்தரின் சபையினுடைய ஆராதனைக்கு உதாரணங்களாக முன்வைக்கப்படாத எத்தனை புத்திமதிகள் சங்கீதங்களில் உள்ளடக்கப் பட்டுள்ளன?*

- *நடனம்: "அவருடைய நாமத்தை நடனத்தோடே துதித்து" (149:3அ; காண்க 30:11; 150:4).*
- *தூபத்தைப் பயன்படுத்துதல் (141:2).*
- *விரோதிகள் மீது சாபங்கள் (109:7; 137:9). நம்மை இழிவாக நடத்துபவர்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு போதித்தார்.*
- *ஆர்ப்பரித்தல் (47:1; 81:1).*
- *கைகொட்டுதல் (47:1).*
- *எக்காளம் ஊதுதல் (81:3).*

- *ஊர்வலங்கள் (42:4; 68:24, 25).*
- *மிருக பலிகள் (51:19).*
- *கைகளை மேல்நோக்கி உயர்த்துதல் (28:2).*
- *கைகளைக் கழுவுதல் (26:6, 7).*
- *தேவாலயத்தை நோக்கி ஆராதித்தல் (5:7;* RSV).

*இந்த நடவடிக்கைகளில் சிலவற்றில் மக்களில் சிலர் பங்கேற்கையில், இசைக்கருவிகளில் ஆராதிப்பவர்களோ அல்லது வாய்ப்பாட்டில் ஆராதிப்பவர்களோ அவற்றை வழக்கமாக நடைமுறைப் படுத்துவதில்லை. ஏன் கூடாது? இந்தக் கூறுகள் புதிய ஏற்பாட்டினால் அதிகாரத்துவப் படுத்தப்படாது இருப்பதால் இவைகள் ஆராதனையில் இருந்து விலக்கிப் பட்டுள்ளன. சங்கீதங்களில் சில கூற்றுகள் கூறப்பட்டிருக்கிறது என்பதால் அவை புதிய ஏற்பாட்டில் அதிகாரத்துவமாவதில்லை - சங்கீதங்கள் சில புதிய ஏற்பாட்டில் மேற்கோள் காட்டப்பட்டிருந்தாலும், மற்றும் பக்தி விருத்திக்காக நாம் சங்கீதங்களை அடிக்கடி மேற்கோள் காண்பிக்கிறோம் என்றாலும் - புதிய ஏற்பாட்டு அதிகாரத்துவத்தை அமல்படுத்துவதில்லை என்பதை நாம் எல்லாரும் ஒத்துக்கொள்கிறோம். கிறிஸ்தவ சுயாதீனம் என்பது, நாம் எதற்குக் கீழ்ப்படிய விரும்புகிறோமோ அதைத் தேர்ந்து கொண்டு, எஞ்சி இருப்பவற்றைப் புறக்கணித்தல் என்று அர்த்தப்படுகிறதா? இல்லை, அது பிரிவினையை மாத்திரமே உண்டாக்குகிறது.*

*கர்த்தருக்கு விண்ணப்பித்தல் என்பதே பாடுதலின் பேச்சாக உள்ளது என்ற கருத்திற்குத் தரப்படும் வலியுறுத்தத்தைக் கொண்டே ஒருவர் மன ஈர்ப்பைப் பெற்றிருக்க முடியும்.*[10] *துதி என்பது கர்த்தருடைய நாமத்திற்கு ஏறெடுக்கப்படலாம் (9:2; 18:49; 61:8; 66:4; 69:30), கர்த்தருடைய அன்பான இரக்கத்திற்கு ஏறெடுக்கப்படலாம் (89:1), கர்த்தருடைய வல்லமைக்கு ஏறெடுக்கப்படலாம் (21:13) அல்லது நமது இரட்சிப்பின் கன்மலைக்கு ஏறெடுக்கப்படலாம் (95:1). ஒரு "சங்கீதம்" என்பது நமது தேவனைத் துதிக்கும் பாடலாக விவரிக்கப் படலாம் (40:3). இதைப்போன்றே, பாடுதல் மற்றும் ஒரு இசைக்கருவியும் குறிப்பிடப்பட்டுள்ள சங்கீதங்களில், கர்த்தரைத் துதித்தல் மீதான இந்த வலியுறுத்தமே காணப்படுகிறது.*[11]

---

குறிப்புகள்

[1]Adam Clarke, *The Holy Bible Containing the Old and New Testaments: A Commentary with Critical Notes* (Nashville: Abingdon , n.d.), 2:690. [2]M. C. Kurfees, ed., *Questions Answered by Lipscomb and Sewell* (Nashville: McQuiddy Publishing Co., 1921), 340-41; Guy N. Woods, *Questions and Answers* (Henderson, Tenn.: Freed-Hardeman College, 1976), 26-30. [3]*ஏசாயா 5:1; 16:10; 23:15, 16; 24:14; 26:19; 27:2; 30:29; 35:6, 10; 38:20; 42:10; 48:20; 51:11; 52:8; 54:1; 65:14.* [4]*ஏசாயா 14:7; 35:2; 42:11; 49:13; 52:9; 55:12.* [5]*காண்க: சங்கீதம் 5:11; 7:17; 9:2, 11; 13:6; 18:49; 21:13; 27:6; 30:4; 40:3; 42:8; 47:6, 7; 59:16, 17; 61:8; 63:7; 68:4; 69:30; 75:9; 95:2; 96:1, 2; 100:1, 2; 101:1; 104:33; 105:2, 43. புள்ளியியல் விபரங்கள்* Richard E. Wolfe, *Songs, Cymbals, and Tambourines* (Nashville: 21st Century Christian, 1998), 74 *என்ற புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டன.* [6]*உதாரணமாக சங்கீதம் 40:3; 63:5; 71:8;*

*89:1; 109:30; 145:21.* ஆகியவற்றைக் காணவும். (Ibid.) [7]உதாரணமாக, வுல்ஃப் என்பவர் சங்கீதம் *33:2; 45:8; 57:7, 8; 68:25; 71:22; 81:2, 3; 92:2, 3; 98:5; 108:*[2]*; 144:9; 147:7; 149:3; 150:1-6* ஆகியவற்றை மேற்கோள் காண்பித்தார். [8]கும்ரான் என்பது ஒருவேளை எஸ்ஸென்ஸ் என்ற யூதப்பிரிவினரின் குடியேற்றப் பகுதியாக இருந்திருக்கும் என்று கல்வியாளர்களால் நம்பப்படுகிறது. இந்தக் குடியேற்றம், *1947*ல் சவக்கடல் சுருள்கள் முதன்முதலாகக் கண்டறியப்பட்ட குகைககளுக்கு அருகாமையில் இருந்தது. [9]வுல்ஃப், *73.* [10]காண்க: சங்கீதம் *9:11; 13:6; 27:6; 30:4; 40:3; 47:6, 7; 57:9, 16, 17; 68:4, 32; 75:9; 95:1; 96:1, 2; 100:1.*

[11]காண்க: சங்கீதம் *33:2, 3; 47:5, 6; 57:8, 9; 71:22; 81:1-4; 87:7; 92:1-3; 98:1-5; 108:1-3; 137:2, 3; 144:9; 147:7; 149:3; 150:1-5.*

---

## சங்கீதங்களில் "பாடல்கள்" மற்றும் "பாடுதல்"

NASB வேதாகமத்தில் சங்கீதங்களின் புத்தகம், "பாடுதல்" மற்றும் "பாடிக்கொண்டிருத்தல்" என்ற வார்த்தைகளை ஏறக்குறைய *90* முறைகளும், அத்துடன் "பாடல்" மற்றும் "பாடல்கள்" என்ற வார்த்தைகளை (மேல் தலைப்புகள் உள்பட) *52* முறைகளும் பயன்படுத்துகிறது. இவைகள் பின்வருபவற்றின் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளன:

- சந்தோஷம் *(5:11; 81:1; 84:2; 90:14; 92:4; 95:1; 98:4, 8; 100:2; 107:22; 132:9, 16; 149:5).*
- கர்த்தருக்கும் அவருடைய நாமத்திற்கும் துதி *(9:2, 11; 40:3; 47:6, 7; 61:8; 67:4; 68:4, 32; 69:30; 75:9; 92:1; 98:4-6; 104:33; 105:2; 108:1, 3; 135:3; 138:1; 146:2; 147:1; 149:3).*
- கர்த்தரிடத்தில் இருந்து ஆசீர்வாதங்கள் *(13:6; 18:46-50; 20:4, 5; 27:5, 6; 30:11, 12; 63:7; 96:2, 3; 138:5).*
- கர்த்தருடைய பண்புகள் *(21:13; 59:16, 17; 89:1; 101:1).*
- நன்றி செலுத்துதல் *(28:7; 30:4; 7:17; 147:7).*
- இசைக்கருவிகளின் துணை *(33:1-3; 57:7-9; 71:22, 23; 81:2; 87:7; 92:1-3; 108:1, 2; 144:9; 147:7; 149:3).*
- ஒரு வேண்டுகோளின் நிறைவேற்றம் *(51:14).*
- இயற்கையின் உருவகம் ஒன்றைப் பயன்படுத்துவதில் மகிழ்ச்சி *(65:13; 96:12).*
- தேவனுடைய கிரியைகள் *(66:2-4).*
- புதுப்பாடல் ஒன்றைப் பாடுதல் *(33:3; 40:3; 96:1; 98:1; 144:9; 149:1).*
- தேவனுடைய வசனத்தைப் பாடுதல் *(119:172).*
- அந்நிய தேசத்தில் ஒடுக்கப்பட்டு இருக்கையில் பாடுதலில் சிரமம் *(137:3, 4).*

ஓவன் D. ஆல்பிரிக்ட்

---

## தீர்க்கதரிசனப் புத்தகங்களில் இசை

தீர்க்கதரிசனப் புத்தகங்கள் பாடுதல் மற்றும்/அல்லது பலவித இசைக்கருவிகள் ஆகியவற்றைப் பல்வேறு வகைகளில் குறிப்பிட்டன. இங்கு சில உதாரணங்கள்

தரப்படுகின்றன.

- பொழுதுபோக்கிற்காக இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன (ஏசாயா 5:12; 23:16; 24:8).
- பாடலில் தேவனுக்குத் துதியும் மகிமையும் தரப்பட்டன (ஏசாயா 12:2, 5; 24:16; 30:29; 42:10, 11; எரேமியா 20:13; 31:7; சகரியா 2:10).
- யூதா மீட்பின் பாடலைப் பாடும் (ஏசாயா 26:1).
- இஸ்ரவேல் அசீரியாவின் வீழ்ச்சியில் சந்தோஷத்துடன் பாடும் (ஏசாயா 30:29-31) மற்றும் கர்த்தருடைய ஊழியக்காரரின் வருகையில் ஒரு புதிய பாடலைப் பாடும் (ஏசாயா 42:1-11).
- எசேக்கியா தமது நாட்கள் நீடிக்கப்பட்டபோது, கீதவாத்தியங்களுடன் பாடினார் (ஏசாயா 38:20).
- எஞ்சியிருந்த இஸ்ரவேலுக்குத் தேவனுடைய வாக்குத்தத்தமுள்ள ஆசீர்வாதங்களினிமித்தம் இஸ்ரவேல் மகிழ்ச்சியுடன் பாடவேண்டியிருந்தது (எரேமியா 31:7).
- எசேக்கியேலின் தேவாலய தரிசனத்தில் பாடகர்கள் காணப்பட்டனர் (எசேக்கியேல் 40:44).
- நேபுகாத்நேச்சார் அரசரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விக்கிரக ஆராதனையில் பல இசைக் கருவிகள் இசைக்கப்பட்டன (தானியேல் 3:5-15).
- இஸ்ரவேல் தன் இளவயது நாட்களில் பாடியதுபோலப் பாடும் என்று ஓசியா கூறினார் (ஓசியா 2:15).
- இஸ்ரவேல் மக்கள் பொல்லாதவர்களாகவும் மற்றவர்கள் குறித்து அக்கறை இல்லாதவர்களாகவும் இருந்ததால் தேவன் இஸ்ரவேலின் பாடல்கள்மீது பிரியமாயிருக்கவில்லை (ஆமோஸ் 5:23; 6:5).

ஓவன் D. ஆல்பிரிக்ட்